
உ
சிவமயம்



யாழ் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும்

இலண்டன் நியூஹாமை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் திரு குமாரசாமி முத்தையா

அவர்களின்

# நினைவு மலர்



*20.03.04*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் குமாரசாமி முத்தையா அவர்கள்



தாயின் மடியில்
03.02.1951



இறைவனடியில்
20.02.2004

## திதி வெண்பா

ஆண்டு சுபானு அமைந்த மாசிதனில்
பூண்ட பூர்வபக்கப் பிரதமையில் - மாண்பு
குமாரசாமி மைந்தன் குணக்குன்று முத்தையா
குமரனவன் தாளடைந்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேணிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

## திருவாசகம்

பால் நினைந்தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலங் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற் கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்னும் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடும்முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே
கூறும் அடியார்கள்வினை தீர்க்கு முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அரங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டன் ஸ்ரீமுருகன் கோயில்
# London Sri Murugan Temple

அரிதான மானிடப்பிறவியை அடைந்த நாம் அப்பிறவியை பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். செம்மையாக வாழ்ந்து, சிறப்புற்று, நலிந்தோர்க்கு உதவி, நானிலம் போற்ற இறைவனடி சேர்வதே நாம் பெறும் பேறு.

இலங்கையில் பிறந்து இங்கிலாந்தில் வாழ்ந்து இறைவனடி சேர்ந்த அமரர் திரு முத்தையா அவர்கள் நல்ல நிலைமையில் இருந்த போதும், கடைசிக் காலத்தில் உன்மத்தனாய் உறைந்த போதும் இறைநம்பிக்கை கொண்டவராகத் திகழ்ந்தார். சில நேரங்களில் தன்னாலியன்ற சேவைகளையும் ஆலயத்தில் செய்து வந்தார்.

இறைவனின் பாத கமலங்களைச் சென்றடைந்த இவர் தம் ஆத்மா சாந்தி அடைய வேண்டி எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.



கயிலை R. நாகநாதசிவம் குருக்கள்
மற்றும் ஆலய குருமார்கள்
இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டன் ஸ்ரீமுருகன் கோயில்
# London Sri Murugan Temple

Charity Registration No: 271097
**78, Church Road, Manor Park, London E17 6AF**
Entrance via Browning Road
**Tel: 020 8478 8433** Fax: 020 8478 0407

திரு முத்தையா அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து மிகவும் துயரமடைந்தோம். எப்பொழுது கோயிலுக்கு வந்தாலும் என்னை "அண்ணே" என்று அன்போடு அழைக்கின்ற அவரின் பண்பாடு எனக்கு மிகவும் பிடித்தமானது. தேர்த்திருவிழா முதலிய விசேட நாட்களில் ஆலயத்தில் தன்னாலியன்ற உதவியை செய்து மகிழ்ந்தவர். தன்னை மறந்த நிலையில் இறை புகழ் பாடல்களை பாடிக் கொண்டிருப்பதை நான் பலமுறை பார்த்து அவரது பக்தியை என்னுள் வியந்ததுண்டு.

அமரர் திரு முத்தையா அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டியும், அவர்தம் குடும்பத்தவர்களும் நண்பர்களும் மன ஆறுதல் பெற வேண்டியும் எல்லாம் வல்ல இலண்டன் முருகப் பெருமானை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சீனி. சம்பத்குமார்
தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

## சைவ முன்னேற்றச் சங்கம் (U.K.)

சைவசமயக் கருத்துணர்வினூடாகச் சமூகசேவை

## Saiva Munnetta Sangam (U.K.)

*"Community Service through Hindu Concern"*

**2 Salisbury Road, Manor Park, London E12 6AB.**
Tel: 020 8514 4732 Fax: 01268 561805
**Bankers:** Lloyds TSB Bank Plc. & National Savings Bank
Registered Charity No. 29208



27th Year
**Management Committee**

*President & Trustee*
Mr. T. Kanagasabai
020 8550 3654

*VicePresident & Trustee*
Mr. S. R Pasupathy
020 89259611

*General Secretary & Trustee*
Mr. S. Anandathiyagar
020 8924 8492

*Treasurer & Trustee*
Mr.G.Gunasegaram
020 85302450

*Trustees*
Dr. V. Balasegaram
Mr. W. Nagaratnam
Mr. V. R. Ramanathan
Mr. C. Sithamparapillai
Mr. V. Sellathurai

*SocialService Secretary*
Mr. V. C. Vamanananthan

*Publication Secretary*
Mr. S.Thamboo

*Building Project Secretary*
Mr. G. Parameswaran

*Religious Secretary*
Mr.Saravanan Anandathiyagar

*School Secretary*
Mrs. P. Uthamakunan

*Membership Secretary*
Miss. K Subramaniam

*Assistant Treasurers*
Mr.V.R.Loganathan
Mr.D.Rabindramohan

*Committee Members*
Mr.Siva Asokan
Mr.S.Atputhananthan
Mrs. V. Kanagenthran
Mr. M Natkunthayalan
Dr.N.Navaneetharaja
Mr R Pathmanathan
Mr. K. Sivagurunathapillai
Miss. S. Sivarjasingam


# பண்பால் உயர்ந்தவர்

இலண்டன் நியூகாம் பகுதியில் கடந்த பல ஆண்டுகளாக வசித்து வந்த திரு. குமாரசாமி முத்தையா அவர்களின் திடீர் மறைவு செய்தியை கேள்வியுற்ற யாம் மிகவும் மனம் வருந்தினோம்.

இவர் மிகவும் சுகயீனமுற்ற நிலையில் கடந்த பல ஆண்டுகள் வாழ்ந்த போதும் மிகவும் தன்னம்பிக்கையுடன் தனிமையில் வாழ்ந்து வந்தார். எமது சங்க நிகழ்ச்சிகளில் ஈடுபாடுடைய நல்ல மனிதராக வாழ்ந்து வந்தவர்.

சங்க அன்பர்களைக் காணும்போது எல்லாம் அவர்களுடன் பேசி மகிழ்வு அடைவார். தனது சிறந்த பண்பால் மக்களைக் கவர்ந்தவர். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எங்கள் சங்கத்தின் சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

து.கனகசபை

தலைவர்

து.கனகசபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from a Tamil Community Leader

# IN MEMORY OF THE LATE MR KUMARASAMY MUTHIAH

He was born on 3rd February 1951in Vaddukoddai, Jaffna. He migrated to the United Kingdom around 1975 He moved to Newham area in 1990. Since then, I had known Mr Muthiah. I used to meet him at the London Sri Murugan Temple. He visited this Temple very frequently and a committed devotee/volunteer. He had helped many of his friends in various ways. Yet, in his later days of life, he could not help himself. It is said that God help only those who help themselves.

The way and the circumstances of his death and discovery of it after about 2 days, is a sad reminder to all of us. All of us (myself included) whether it be individual or groups, our Tamil Community, Tamil welfare organaisations, Religious organaistaions and Hindu Temples, should have taken some interest in him. This may have prevented ending his sad story at a relatively early age of 53. Perhaps, there are lessons to be learnt. The best way we could remember him, is to prevent anyone else, in our community, to suffer the same fate. It is time to be pro – active and put in place programme of work, to take care of vulnerable people in our community.

Mr Muthiah despite his failure in personal life, he was very friendly. He would not harm any one. He was very decent and gave due respect to elders. He was a quiet person who generally minded his own business. He entered God's feet on 20th February 2004.

Let me conclude by saying that "He who is hidden, who has entered into the cave of the heart of hearts can not be seen with external eyes; he is seen with the eyes of the soul. Without beginning, without end, he is not destroyed when the body is destroyed. He will live with us for ever and ever".

May his soul rest in peace.

C. SITHAMPARAPILLAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பர்கள் அன்பர்கள் நினைவுகள்

முத்தையா எனது ஆருயிர் நண்பன். சிறுவயதில் இருந்து வட்டுக் கோட்டையிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரியில் ஒன்றாகப் படித்தோம். இளவயதிலே (1975) லண்டனிற்கு படித்து முன்னேறும் நோக்கத்தோடு வந்தவர். பிற்காலத்தில் கிழக்கு லண்டனை இருப்பிடமாகக் கொண்டு சாதாரண மனிதனாக இறந்தது கவலைக்குரியது. முத்தையா பலருக்கு, இந்த நாட்டு அரசாங்கம் சாப்பாடு போடாத போது தான் சாப்பாடு போட்டு, இந்த நாட்டு அரசாங்கம் தங்க இடம் கொடுக்காத போது தான் தங்க இடம் கொடுத்து, பெருந்தகையாளர் இவர்.

இந்த நாட்டில் தவறு செய்து சிறைக்கு செல்ல வேண்டிய ஒருவனுக் காகத் தான் சிறை சென்றவர்.(நண்பனொருவன் காரைச் செலுத்திக்கொண்டிருக்கும் போது கார் விபத்திலகப்பட்டு நண்பன் காரை விட்டிறங்கி ஓடித் தலைமறைவாக காரில் அருகில் நண்பனுடன் இருந்த முத்தையா அவனுக்காக தானே அக்காரைச்செலுத்தியதாக பொலிசார் கேட்டபோது கூறி அப்பிழையை ஏற்றுச் சிறைசென்றார். அதற்குப் பிறகும் அந்த நண்பனுடன் நட்புறவு பாராட்டி அவனுக்குத் தொடர்ந்தும் பற்பல உதவிகள் செய்த முத்தையாவின் பண்பு எல்லோருக்கும் அமையாததாகும்.)

மிகவும் பழக்கமில்லாதவர்களை தன் வீட்டில் அவர்கள் கஸ்டப்படும் போது அவர்களைத் தன் வீட்டில் வாழ வைத்து, பல சமயங்களில் மற்றவர்களுக்காகத் தன் பணத்தைச் செலவழித்து, ஆரம்ப காலத்தில் இலங்கை அகதிகளுக்காக தனது நேரத்தைச் செலவழித்து, மாணவர் மத்தியில் தமிழ் ஈழப்பிரச்சனையைப் பிரகடனப்படுத்தி இன்னும் பற்பல நன்மைகளை பலருக்குச் செய்தவர்.

பணம் தேவைப்பட்டால் கேட்பார், பணம் இருக்கும் போது திரும்பிக் கொடுப்பார். களவு, பொறாமை, வஞ்சகம், கேலி, மற்றவர்களைக் கீழே போடும் மனப்பான்மை ஒரு போதும், முத்தையாவிற்கு இருந்ததில்லை. நான் உண்டு என் குடும்பம் உண்டு என்று சொல்லி தம்பெற்ற தாய் தந்தையரையே கைவிடும் எம் சமுதாயத்தில் முத்தையா ஒரு முத்து . இவருடைய பண்புள்ள ஆத்மா சாந்தியடைவதாக.

ஆருயிர் நண்பன் சிசில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தையாவை எனக்குப் பத்து வருடமாகத் தெரியும். அவர் என்னுடைய கடைக்கு ஒவ்வொரு நாளும் வருவார். அவர் எப்போதும் என்னையும் என்னைச் சேர்ந்தவர்களையும் பகிடிகள் மூலம் மகிழ்விப்பார். அடிக்கடி என்னுடன் தன் தாயைப் பற்றியும், தனது அக்காவைப் பற்றியும் பேசுவார். அவர்களுக்குத் தன்னால் ஆன உதவியைச் செய்ய வேண்டும் என்று சிந்திப்பவர் முத்தையா. பணம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் எப்போதும் சந்தோசமாக உரையாடுவார். இவருடைய ஆத்மா சாந்தியடைவதாக.

சிவா ( S & D Wines & Food)

முத்தையாண்ணை எங்களைத் தன் பகிடி மூலம் சிரிக்க வைப்பார். சந்திரிக்காவிடம் எங்கள் பிரச்சனைகளைச் சந்திக்கும்போது பேசுவேன் என்று அடிக்கடி விகடமாகக் கூறுவார். அகதிகளாக வந்த தமிழர்களையும் அன்போடு மதிப்பவர். அவர்கள் துன்பங்களில் கலந்து கொள்பவர். அவருடைய மனம் வஞ்சகம் இல்லாதது. ஆனாலும் அவருடைய அரசியல் அறிவும் திறமையும் எதனையும் ஏற்கும் மனமும் அவருடைய உயர்ந்த பண்பும் மெச்சத்தக்கது.
வாரத்தில் இரு தடவையாவது எங்கள் கடைக்கு வருவார். எங்கள் குடும்ப நலன் விசாரிப்பார். பிள்ளைகளை விசாரிப்பார். எங்கள் கடையில் சாமான் வாங்கினால் சொன்ன தவணைக்கு பணத்தை கொடுத்து விடுவார். பணம் கடனாக வாங்கினால் உரிய காலத்தில் திருப்பிக் கொடுத்து விடுவார். மிகவும் பண்புள்ள மனிதர். அவர் பேசிய அடுக்கு மொழி என்றும் எங்கள் உள்ளங்களில் இருக்கும்.

சுந்தரலிங்கம், குமார், கணேஸ்வரன்,
ரவிச்சந்திரகுமார், ஆனந்தராஜா.

முத்தையா எனக்கு மட்டுமல்ல, எனது வயதான பெற்றோருக்கும் அன்பனாக இருந்தார். அவர்களை அவ்வப்போது சந்தித்து சுகநலன் விசாரித்தார். அதனால் அவர்களின் மனதில் தனியிடம் பெற்றவர். அவரது பிரிவினால் துயருறுகின்றேன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

நண்பன் பிரின்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு நண்பன் முத்தையாவோடு பல வருடம் பழகிஉள்ளேன். அவருடைய அன்பு, பண்பு, எமது குடும்பத்துடன் அவர் பழகிய முறை எல்லாமே ஒரு உயர்ந்த இடத்தில் அவரை வைத்துள்ளது. எங்கள் சிந்தனையில் அவர் எப்போதும் இருப்பார். ஒவ்வொரு நாளும் அவரைச் சந்தித்து பழகிய நான் அவர் மறைவை கவலையுடன் ஏற்க வேண்டி உள்ளது. அவருடைய ஆத்மா சாந்தியடைவதாக.

அன்பு கப்பல் சிறி, கமலா அக்கா , அம்மா

முத்தையா அண்ணையை எனக்கு அதிககாலம் தெரியாது. ஆனால் குறுகிய காலத்தில் அவருடன் ஏற்பட்ட பழக்கத்தில் அவர் எனக்கு சில உதவிகளைச் செய்துள்ளார். அவரைப் புரியாதவர்களுக்கும் உதவி செய்யும் மனப்பாங்குடையவர். அவர் யாவருடனும் மிகவும் அன்பாக பழகுவார். அவர் பிரிவு மனவருத்தத்திற்குரியது. அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்.

அன்பு நண்பன் Bond

முத்தையாண்ணை தமிழ் மக்கள் மத்தியில் மிகவும் அரசியல் தெளிவுள்ளவர். அவர் பல நாட்டு அரசியலையும் தெரிந்தவர். அவருடைய சாதாரண வாழ்க்கையைப் பார்த்து சிலர் அவரை தப்புக்கணக்கு போடுவதுண்டு. அவருடைய உலக அறிவு, தமிழ் மக்களின் கஷ்டங்களை உணர்ந்து துடிக்கும் மனம், உதவி செய்யும் மனப்பான்மை ஆகியன என்னை மகவும் கவர்ந்துள்ளன. அவருடைய ஆத்மா சாந்தியடைவதாக.

நண்பன் ஈசன்

முத்தையா! சிறுவயதில் நாமிருவரும் ஒன்றாகப் படித்தோம். பின் London இல் பல இடங்களில் ஒன்றாக இருந்தோம். சிந்தனையில் பல எண்ணங்கள் இருந்தாலும் உமது உண்மையான உதவிபுரியும் உள்ளமும், அடுக்கு மொழியில் பேசும் அழகு தமிழும் என் மனதில் என்றும் நிலைத்திருக்கும். உம் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

ஆருயிர் நண்பன் ஆனந்தராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நண்பன் முத்தையாவின் அன்புள்ள இதயமும், அந்த இதயத்தின் எதையும், தாங்கும் ஆற்றலும், எவரையும் உபசரிக்கும் மனமும், அவரும் சிரித்து வாழ்ந்து , ஏனையவரையும் சிரிக்க வைத்து வாழ்ந்த நாட்களும் என் மனதில் எப்போதும் இருக்கும். அவருடைய ஆத்மா சாந்தியடைவதாக.

அன்பு நண்பன் இந்திரகுமார்.

முத்தையாப்பா, உங்களைப் பார்க்கும் போதெல்லாம் எங்கள் அப்பா, மாமா, உறவினர்களை நாம் பிறந்த நாட்டிலே காணுகின்ற, கதைக்கின்ற சந்தோசம் வருவதுண்டு. நாங்கள் கஷ்டப்பட்டு வேலை செய்து வரும்போது உங்கள் பேச்சினால், எங்களை உற்சாகப்படுத்தி, சிரிக்க வைத்து, அன்னிய நாட்டிலே எங்களுக்குப் புத்திமதி பல சொல்லி எங்கள் வாழ்க்கை நல்லதாக இருக்க வேண்டும் என்று விரும்பும் உங்கள் இதயம் மிகவும் பாராட்டத்தக்கது. நீங்கள் எப்போதும் எங்கள் நினைவுகளில் இருப்பீர்கள்.

தீபன், குமார், ரஞ்சன்

இறைவன் ஞாலம் என்ற நாடக மேடையில் மானிடம் என்ற பாத்திரத்தை நமக்குத் தந்துள்ளான். நாம் அவ்வப்போது ஏற்கும் பற்பல வேடத்திலும் நடித்து முடித்து இறுதியில் அவன் திருவடியை அடைய முயல்வோம். எம் செயலாவது யாதொன்றும் இல்லை.எல்லாம் அவன் செயல். அமரர் குமாசாமி முத்தையாவின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இலண்டன் முருகனைப் பிராரர்த்திக்கின்றோம்.

திருமதி நா. பாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Thank You

We sincerely thank all those who sent condolence messages and expressed sympathy in person on the death of our beloved Mr Muthiah.
We also extend our appreciation and gratitude to all those who helped and participated in the funeral service and other religious rites.

Micheal Muthiah (Son)
Jeyasingham Gunasegaram (Cousin)
Cicel Sooriakumar (Friend)
R.Murugananthan (Tamil Community Volunteer)

## நன்றி நவிலல்

எங்கள் அன்பிற்குரிய அமரர் முத்தையாவின் இறப்புச்செய்தியை அறிந்து தங்கள் துக்கத்தை நேரிலும் தொலைபேசி மூலமும் தெரியப்படுத்தியோர்க்கும், அவரது தகனக்கிரியை, அந்தியேட்டி, ஆத்மசாந்திப்பூசை ஆகிய நிகழ்வுகளில் பங்குபற்றிய அனைவருக்கும், பலவகைகளில் உதவிகள் புரிந்தோர்க்கும், எங்களது உளமார்ந்த நன்றிகள்.

மைக்கேல் முத்தையா (மகன்)
ஜெயசிங்கம் குணசேகரம் (ஒன்று விட்ட சகோதரர்)
சிசில் சூரியகுமார் (நண்பர்)
இ. முருகானந்தம் (தமிழர் சமூகத் தன்னார்வத் தொண்டன்)

Printed by JR Print Tel: 020 8503 6643 www.jrprint.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org